**வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்ட (என்ஆர்சீபி) மூல நோக்கம் மற்றும் மேலதிக நிதியளித்தல் - 2014**

---

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்ட (என்ஆர்சீபி) மூல நோக்கம் மற்றும் மேலதிக நிதியளித்தலின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2010 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய 2639- எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.05 ஆம் பிரிவின் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையானது செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டப்பணிகளின் தேசிய மட்டத்திலான முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு போன்றவற்றிற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பாக உள்ளது. வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் 170 கி.மீ நீளமான தேசிய வீதியினை புனரமைப்பதும் முன்னேற்றுவதுமே இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். செயற்திட்டத்தின் ஆரம்ப மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,980 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 146 மில்லியனானதுடன், அதில் ரூபா 14,950 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 130 மில்லியனை நிதியளிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டிருந்தது. மேலும், வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் ஏறத்தாழ 288 கி.மீ நீளமான தேசிய நெடுஞ்சாலைகளை புனரமைப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியானது 2013 மே 31 இன் 2890 எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடனின் கீழ் ரூபா 8,840 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 68.34 மில்லியனையும், 2013 மே 31 இன் 2891 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடனின் கீழ் ரூபா 3,900 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 30 மில்லியனுமான மேலதிக நிதியளிப்பிற்கான ஒதுக்கத்தினை மேற்கொண்டிருந்தது. ஆரம்ப கடன் உடன்படிக்கையின் கீழ் செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 ஒக்தோபர் 22 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மேலதிக நிதியளித்தல் ஏற்பாடுகளின் கீழான நடவடிக்கைகள் 2013 மே 13 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில்

செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளிற்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதுவும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக நிதியளித்தல் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 பிரிவு மற்றும் 8.6 ஆம் பிரிவுகளுக்கு முரணாக செயற்திட்டத்துடன் இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு படி மற்றும் மருத்துவ உதவித் தொகையாக ரூபா 745,390 செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 33 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட சூத்திரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டினுள் செயற்திட்டத்துடன் இணைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ரூபா 24,129,037 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பொது திறைசேரியின் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு முரணாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்திற்கு வரி விலக்களிப்பு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் ரூபா 512,648 தொகை பெறுமதி சேர் வரியாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்த கொள்வனவு வழிகாட்டலின் 5.4.4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், எந்தவொரு ஒப்பந்த வேலைக்கான ஆரம்ப முற்பணத்தினை ஒதுக்கத் தொகை மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்கள் நீங்கலாக ஒப்பந்தத் தொகையில் செலுத்தப்பட வேண்டும். எவ்வாறெனினும், மேற்குறித்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக ஒதுக்கத் தொகை மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்கள் உள்ளடங்களாக ரூபா 3,811 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண் டிற் கான பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண் டின் போது | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். |
| கடன் 2639 எஸ்ஆர்ஜ | 130 | 14,950 | 2,536.00 | 2,866.40 | 112.37 | 14,609 |
| கடன் 2890 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) | 68 | 8,840 | 2,438.00 | 1,358.30 | 13.03 | 1,694 |
| கடன் 2891 – எஸ்ஆர்ஜ | 30 | 3,900 | - | 1,257.30 | 11.46 | 1.490 |
| ஜீஓஎஸ்எல் | - | 2,080 | 18.32 | 41.14 | 0.33 | 44 |
| **மொத்தம்** | **228** | **29,770** | **4,992.32** | **5,523.14** | **137.19** | **17,837** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட 1 ½ வருட காலத்தினுள் கடன் பெறுகையில் ஒதுக்கப்பட்ட தொகையில் 60 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்ட நடவடிக்கைகளின் முதன்மை நோக்கெல்லை மற்றும் மேலதிக நிதியளித்தல் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகளுடனான இரு கூறுகளைக் கொண்டுள்ளது. வேலைகளின் மூல நோக்கெல்லைகளிற்கான செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், 170 கி.மீ.

நீளமான வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் 10 தேசிய பாதைகளினை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அத்தகைய வீதிகளின் புனரமைப்பிற்காக 10 ஒப்பந்த பொதிகள் செயற்திட்டத்தால் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அனைத்து புனரமைப்புப் பணிகளும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கட்டம் - II இன் கீழ் ஒப்பந்ததாரர்கள் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட வீதிப் பராமரிப்பு ஒப்பந்தங்களுக்காக கட்டுப்பட்டிருந்ததுடன், மேலும் 03 வருடங்களுக்கு அத்தகைய வீதிகளின் பாராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், மேலதிக நிதியளித்தல் ஏற்பாடுகளின் கீழ் வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் 10 வீதிகளின் புனரமைப்பு பணிகளுக்கான ஒப்பந்தங்கள் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்ததுடன், பொதீக முன்னேற்றம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 30 சதவீதம் முதல் 75 தசவீதம் வரையானதாகவிருந்தது. இவற்றுள், யாழப்பாணம் - பண்ணை - ஊர்காவற்துறை வீதியின் புனரமைப்புப் பணிகள் 2013 திசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 30.7 சதவீதமான மந்தமான பௌதீக முன்னேற்றத்தை காண்பித்திருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

(அ) செயற்திட்டத்தின் மூல நோக்கெல்லையின் கீழ் கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்பணி அறிக்கையின் பிரகாரம், வல்லாய் - அராலி வீதியின் பல்வேறு இடங்களிலுள்ள பாதை மருங்குகளை விரிவுபடுத்தல் மற்றும் சுவரை நிர்மாணித்தல் போன்றவற்றிற்காக வெளியிடப்பட்ட பரிந்துரைகள் செயற்திட்டத்தால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட வீதிப் பராமரிப்பு பணிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் சேவை நிலைகளை தீர்மானிப்பதற்காகவும் செயல்திறன் குறிகாட்டிகளின் பிரகாரம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக மாதாந்த செயற்திறனை மதிப்பாய்வு செய்வதற்கு நியமங்கள் நிறுவப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திறனை அடிப்படையாகக் கொண்ட பராமரிப்புப் பணிகளுக்காக முறைமைக் கூற்றொன்று ஒப்பந்ததாரரால் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திறனை அடிப்படையாகக் கொண்ட பராமரிப்பு பணிகளுக்காக ஒப்பந்தக்காரர்களுடன் பிரிதொரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக கோரிக்கைகளை தீர்ப்பனவு செய்யும் போது சர்ச்சை ஏற்படக்கூடிய சாத்தியத்தினை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

(iii) ரூபா 3,181,443 கிரயத்தில் மேற்கொள்ளப்பட்ட மாங்குளம் - முல்லைத்தீவு வீதியின் புனரமைப்பு பணிகளுடன் தொடர்புடைய குறை பொறுப்புக்காலம் 2014 யூலை மாதத்தில் பூர்த்தியடைந்திருந்தது.

அவ்வாறெனினும் இணக்கப்பாடற்ற அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த வீதியின் 18 + 446 கி.மீ இலிருந்து 20 + 720 கி.மீ இடைப்பட்ட பகுதியில் 11 இடங்களில் குறைகளை நிவர்த்தி செய்தல் 2014 திசெம்பர் 31 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் மேலதிக நிதியளிப்பு திட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆலோசனைச் சேவை ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஆலோசனையாளரின் பதவியணியினரை ஒப்பந்தக்காரரிடமிருந்து எந்தவித நிதி அல்லது ஏனைய அனுகூலங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதை அனுமதிக்காத போதிலும் ஆலோசனையாளரின் தொழில்நுட்ப பதவியணிக்கான ரூபா 86,810 மேலதிக நேர கிரயம் ஒப்பந்தக்காரால் ஏற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) ஏற்றுக்கொண்ட கால எல்லையினுள் ஒப்பந்தங்களை பூர்த்தி செய்வது தொடர்பாக ஏற்படும் இடர்களால் ஒப்பந்த நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காக ஒப்பந்தகாரரின் நிதி மற்றும் பௌதிக வளங்கள் திறம்பட பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் - பண்ணை - ஊர்காவற்துறை வீதியின் புனரமைப்புப் பணிகளுக்காக ஒப்பந்தக்காரால் தரக்கட்டுப்பாட்டு முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் உள்ளடங்கலான மனித வளங்கள் போதியளவில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) தொகுதி 3 – தொழில்நுட்ப விபரக் குறிப்பின் 103.4 ஆம் பந்தியின் பிரகாரமாக, பாதுகாப்பு முன் ஏற்பாடுகள் மற்றும் திருப்தியான போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஏற்பாடுகளுக்கு ஒப்பந்தக்காரர் இணங்க வேண்டியிருப்பதுடன் பணிகள் நிறைவேற்றப்படுகின்ற போது அது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். மதவாச்சி – கெபிதிகொல்லாவ வீதியின் புனரமைப்பின் போது ஆழமாக தோண்டப்பட்ட இடங்களில் தடைகள் வைத்திருக்காமை, வீதியின் குறுகிய இடங்களில் வீதிச் சமிஞ்ஞைகள் இல்லாதிருந்தமை போன்ற காரணங்களால் பாரதூரமான பாதுகாப்பு மீறல்கள் இடம்பெற்றதாக முன்னேற்ற அறிக்கை மற்றும் தள கூட்ட குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருந்தன.

(iv) கெபிதிகொல்லாவ – பதவிய வீதியில் குறைபாடுகளுடன் கூடிய இடங்களுக்காக நியமங்களுக்கு அமையாத உற்பத்தி குறிப்புரைகள் வெளியிடப்பட்டிருந்ததெனினும் அவசியமான சீரமைத்தல் நடவடிக்கைக்கான பொறியியலாளரின் அங்கீகாரத்திற்காக அல்லது புகைக்கீல் படுகையின் குறைபாடுடைய பகுதியினை ஒழுங்கமைப்பதற்கான திட்டங்கள் ஒப்பந்தக்காரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(v) ஒப்பந்த விசேட நிபந்தனை 4.18 ஆம் விசேட பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஒப்பந்தக்காராலும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு அறிக்கைகளை ஒவ்வொரு மாதமும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரால் சுற்றுச்சூழல் இணக்கப்பாட்டு நடைமுறைகள் பின்பற்றப்படாத பல்வேறு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. 2015 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனைகளில் மதவாச்சி – கெபிதிகொலாவ வீதியில் குப்பை கூழங்கள் மற்றும் அகழ்வுப் பொருட்கள் குவிக்கப்பட்டிருந்தமையும் எதாகடையில் நிறுவப்பட்டிருந்த கிரேஷர் (crusher) பொறியில் மற்றும் புகைக்கீல் பொறியிலிருந்து வெளியேறும் தூசினைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

(vi) மதவாச்சி – மன்னார் வீதி மற்றும் யாழ்ப்பாணம் - பண்ணாய் - ஊர்காவற்துறை வீதியின் புனரமைப்பு பணிகளுக்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்குப் பதிலாக குழாய்கள் மற்றும் பொருத்திகளை விநியோகித்தல், தரையை தோண்டுதல், மீண்டும் நிரப்புதல் மற்றும் குழாயிடும் செயற்பாடுகள் செயற்திட்டத்தால் கையேற்கப்பட்டு முறையே ரூபா 15.9 மில்லியன் மற்றும் ரூபா 16.8 மில்லியன் கிரயம் ஏற்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 3.8 மில்லியன் பெறுமதியான குழாய்கள் மற்றம் பொருத்திகள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மரதன்கடவலயிலுள்ள நிறைவேற்றும் பொறியியலாளர் அலுவலகத்தில் செயற்பாடற்று காணப்பட்டது.

(vii) யாழ்ப்பாணம் - மன்னார் - ஊர்காவற்துறை வீதியின் புனரமைப்பிற்காக கைப்பற்றப்பட்ட காணிகளுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் இறுதியில் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்திற்கு ரூபா 8.19 மில்லியன் தொகை செயற்திட்டத்தால் விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிமையாளர்களின் பட்டியல், கையேற்கப்பட்டமையை உறுதிசெய்து அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கடிதங்கள் போன்ற கொடுப்பனவு தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செலவிடப்படாத ரூபா 1.32 மில்லியன் தொகையான பணம் மீளாய்வாண்டின் இறுதியில் பிரதேச செயலகத்தால் வைப்புக் கணக்கொன்றிற்கு மாற்றப்பட்டிருந்தது. மேலும், 76 காணித் துண்டுகளின் உரிமையாளர்களை இனங்காணாமல் செயற்திட்டத்தினால் ரூபா 2.79 மில்லியன் பணம் பிரதேச செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வல்லாயிலிருந்து அராளி வீதியின் 0+000 கி.மீ தொடக்கம் 27+400 கி.மீ. வரை புனரமைப்பதற்கான ஒப்பந்தம் 2011 மே மாதத்தில் கையளிக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் 4+140 கி.மீ. தொடக்கம் 9+200 கி.மீ. வரையான வீதியின் பகுதியை புனரமைக்கும் பணிகள் பாதுகாப்பு காரணங்களின் அடிப்படையில் மீளப்பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தக்காரரால் முன் அங்கீகாரமின்றி புனரமைத்தல் பணிகளுக்கு தேவையான அனைத்து மணல் தேவைப்பாடுகளும் கிளிநொச்சி பிரதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் விளைவாக செயற்திட்டம் மற்றும் ஒப்பந்தக்காரரிடையே எழுந்த சர்ச்சையானது ஒப்பந்தக்காரருக்கு ரூபா 91.20 மில்லியன் தொகையும் நடுவருக்கு ரூபா 1.62 மில்லியன் தொகையும் செலுத்துவதற்கு உடன்பட்டதன் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறித்த சர்ச்சைக்கு மேலதிகமாக, தோணிகலயிலிருந்து கல்குளம் வீதி வரையான புனரமைப்பிற்காக 2011 மே 10 ஆம் திகதி கையளிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் “Dense Graded Aggregate Base Course” இற்காக 115 சதவீதத்தால் அளவீட்டுப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளை அதிகரித்தமையின் அடிப்படையில் மேலுமொரு சர்ச்சையொன்று எழுந்திருந்தது. அதனால் 2013 திசெம்பர் மாதத்தில் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் செயற்திட்டத்தால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 25.70 மில்லியன் தொகையினை மேலதிகமாகப் செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும் திட்ட ஆலோசனையாளரால் தயாரிக்கப்பட்டிருந்த பூரணப்படுத்தப்படாத அளவீட்டுப்பட்டியல் காரணமாக குறித்த சர்ச்சை எழுப்பப்பட்டதாக பின்னர் வெளிப்படுத்தப்பட்டதுடன் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.